# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 14,585—1965 දෙසැම්බර් 15 වෙනි බදාදා—1965.12.15

14,585 ம் இலக்கம்—1965 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 15 ந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## விலைக்கட்டளைகள்

**விலைக்கட்டளை இல. ஜி. 7—1965.** **உப உணவுப் பொருட்கள்**

### விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

#### கட்டளை

விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (அத்தியாயம் 173) 4 ம் பிரிவை அதன் 3 (2) உட்பிரிவோடு சேர்த்து வாசிக்குமிடத்து என்மேற் பாரிக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டு காலி பரிபாலன மாவட்ட உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) கார்த்தியே புன்சிகேவாகே புத்ததாச த சில்வா ஆகிய நான் இக்கட்டளையால்—

(1) 1965 ம் ஆண்டு கார்த்திகை 15 ம் திகதி வெளியான 14,558 ம் இலக்க அதிவிசேட இலங்கை அரசாங்க வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட்ட 13 ம் திக்தி கார்த்திகை மாதம் 1965 ம் ஆண்டின் ஜி. 5 இலக்கங் கொண்ட எனது விலைக்கட்டளையை இத்தேதியிலிருந்து நீக்கி விடுகிறேன்.

(2) கொழும்பு நகரசபை எல்லைகட்குள் விற்கப்படவென விலைகளின் கட்டுப்பாட்டுச் சட்டம் 173 ம் அத்தியாயத்தின் பிரகாரம் தற்காலிகமாக விதிக்கப்பட்டுள்ள மொத்த வியாபாரியினது ஆகக்கூடிய மொத்த விலைகள் இதனோடு இணைக்கப்பட்டுள்ள 3 ம் அட்டவணையில் கூறப்படும் தொகைகளால் அதிகரிக்கப்பட்டு ஒரு மொத்த வியாபாரியினது ஒரு அந்தரின் ஆகக்கூடிய மொத்த விலையின் சார்பாக உள்ள 1 ம் பத்தியிற் கூறப்படும் பொருட்களின் விலைகள் இரண்டாம் அட்டவணையிற் கூறப்படும் எல்லைக்கு முறையே உரிய விலைகளாக ஆக்ஞையிடுகிறேன் ; இவ் எல்லைக்குள் இவ்விலைகட்கு கூடுதலாக அப்பொருட்களை விற்கலாகாது.

(3) கொழும்பு நகரசபை எல்லைகட்குள் விற்கப்படவென விலைகளின் கட்டுப்பாட்டுச் சட்டம் 173 ம் அத்தியாயத்தின் பிரகாரம் தற்காலிகமாக விதிக்கப்பட்டுள்ள சில்லறை வியாபாரியினது ஆகக்கூடிய சில்லறை விலைகள் இதனோடு இணைக்கப்பட்டுள்ள 4 ம் அட்டவணையில் கூறப்படும் தொகையால் அதிகரிக்கப்பட்டு ஒரு சில்லறை வியாபாரியினது நிகர இருத்தல் ஒன்றின் ஆகக்கூடிய சில்லறை விற்பனை விலையின் சார்பாக உள்ள 4 ம் பத்தியிற் கூறப்படும் பொருளின் விலை முதலாவது அட்டவணையிற் கூறப்படும் எல்லைக்கு முறையே உரிய விலையாகவும் ; மேற் குறிக்கப்பட்டுள்ள எல்லைக்குள் அல்லது 2 ம் அட்டவணையிற் குறிக்கப்பட்டுள்ள அதிகார வட்டத்துள் இவ்விலைக்குக் கூடுதலாக அப்பொருளை விற்கலாகாது என்றும் உடனடியாக நடைமுறையில் வருமாறு விதிக்கிறேன்.

(4) இக்கட்டளையின் நோக்கத்துக்காக—

(அ) இதனோடு இருக்கும் இரண்டாவது அட்டவணையின் முதலாவது பத்தியில் விபரிக்கப்பட்டுள்ள பொருட்களுள் எவற்றையேனும் ஒரு அந்தர் அல்லது அதற்கு மேலான தொகையில் விற்றல் அல்லது திருப்பி விற்பதற்காக விற்றல் மொத்த விற்பனையாகவே கருதப்படும் என்று ஆக்ஞையிடுகிறேன் ;

(ஆ) இதனோடு இருக்கும் 2 வது அட்டவணையின் முதலாவது பத்தியில் விவரிக்கப்பட்டுள்ள பொருட்களுள் எவற்றையேனும் ஒரு மொத்த அந்தருக்குக் குறைந்த தொகையில் பாவனைக்கு அல்லது உபயோகத்திற்காக விற்றல் சில்லறை விற்பனையாகவே கருதப்படும் என்று ஆக்ஞையிடுகிறேன்.

(5) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள எந்த இடப்பரப்பிலும், இதனோடிருக்கும் 2 வது அட்டவணையின் 1 வது பத்தியில் விவரிக்கப்பட்டுள்ள பொருட்களுள் எவற்றையேனும் வேறு ஒரு பொருளோடுங் கலந்து விற்கலாகாது என ஆணையிடுகிறேன்.

(6) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் இதனோடிருக்கும் 2 வது அட்டவணையின் 1 வது பத்தியில் விவரிக்கப்பட்டுள்ள பொருட்களுள் எவற்றையேனும் தம்வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது அல்லது எவ்வாகனத்திலாவது வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு பொருளினதும் சிறு தொகையினைத் தகுந்ததொரு கொள்கலத்தில் வைத்து; அவ்வப் பொருளுக்கு இக்கட்டளையால் நியமிக்கப்பட்டுள்ள ஆகக்கூடுதலான விலைகளை ஒரு அங்குலப் பிரமாண உயரத்திற்குக் குறையாத எண்களில் விலையட்டைகளிலோ அல்லது பலகைகளிலோ எழுதி அவ்வப்பொருளுக்கு உரிய விலையினை அவ்வப் பொருளின் சிறு தொகையினைக் கொண்ட கொள்கலன்களில் இணைத்துப் பகிரங்கமாகப் பார்வைக்கு வைத்தல் வேண்டுமென ஆணையிடுகிறேன்.

(7) இக்கட்டளையின் நோக்கத்துக்காக " இருத்தல் " அல்லது " இரு. " என்பது அவோர்டுபோஸ் எடுத்தலளவை முறையின் பிரமாண இருத்தல் நிறையாகக் கருதப்படுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(8) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் இதனோடிருக்கும் 2 வது அட்டவணையின் 1 வது பத்தியில் விவரிக்கப்பட்டுள்ள பொருட்களுள் எதனையும் விற்கும் ஒவ்வொருவரும் அதே அட்டவணையின் அதே பத்தியில் விவரிக்கப்பட்டுள்ள அதே பொருட்களுள் எதனையும் சில்லறையாக விற்கும் ஒவ்வொருவரும், அப்பொருட்களை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னாருக்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டுப் பற்றுச்சீட்டு வழங்கவேண்டுமென ஆணையிடுகிறேன் :—

(அ) விற்பனை நடந்த தேதி ;
(ஆ) விற்ற பொருளின் தொகை (நிறையில்) ;
(இ) விற்ற தொகைக்குக் கொடுக்கப்பட்ட விலை ;
(ஈ) எவ்வித விற்பனை அதாவது, மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா என்பது.

(9) இதனோடிருக்கும் 2 வது அட்டவணையின் 1 வது பத்தியில் விவரிக்கப்பட்டிருக்கும் பொருட்களுள் ஏதாவதொன்று விற்கப்படுமிடத்து அவ்வட்டவணையின் 3 வது, 4 வது பத்திகளிற் குறிக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய விலைகளில் அவ்வாறு விற்கப்படும் பொருளைச் சுற்றிக் கொடுக்கும் உறை அல்லது வைத்துக் கொடுக்கும் கொள்கலம் ஏதாவது உபயோகப்படின் அதன் விலையும் அடங்க வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

**1965 ம் ஆண்டு மார்கழி 9 ந் திகதி காலை 10 மணிக்கு, காலியில் கைச்சாத்திடப்பட்டது.**

கா. பு. பு. த சில்வா,
உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு),
காலி பரிபாலன மாவட்டம்.

அட்டவணை

| பத்தி 1 | பத்தி 2 | பத்தி 3 | பத்தி 4 |
|---|---|---|---|
| பொருளின் விவரம் | பகுதி அல்லது நாலு முறிவுப் பகுதி | கொழும்பு மாநகரசபை எல்லைக்குள் மொத்த வியாபாரியின் மொத்த அந்தர் ஒன்றின் ஆகக் கூடிய மொத்த விலையின் மேலதிக விலை | கொழும்பு மாநகரசபை எல்லைக்குள் சில்லறை வியாபாரியின் நிகர இருத்தல் ஒன்றின் ஆகக்கூடிய சில்லறை விலையின் மேலதிக விலை |
| | | ரூ. ச. | ரூ. ச. |
| வெங்காயம் (ஈரவெங்காயமும் தவிர்த்து) ஈரவெங்காயமும், உருளைக்கிழங்கும் | பெந்தொட்ட ப.ச. பகுதி, இந்துருவ கி.ச. பகுதி, பஹல கம்ஹய கி.ச. பகுதி, கொஸ்கொட கி.ச. பகுதி, ஊற கஸ்மன்ஹந்திய கி.ச. பகுதி | 1 72 | 0 2 |
| கொத்தமல்லி, உழுந்து (தோலுடன்), பயறு, துவரம்பருப்பு, கடலைப்பருப்பு, புளி | டி | 2 72 | 0 2 |
| வெங்காயம் (ஈரவெங்காயமும் தவிர்த்து) ஈரவெங்காயமும், உருளைக்கிழங்கும் | காலி மாநகரசபைப் பகுதியும், நாலு முறிவுப் பகுதியும், அம்பலாங்கொட ந.ச. பகுதி, வத்துகெதற ப.ச. பகுதி, எல்பிட்டிய ப.ச. பகுதி, பலப்பிட்டிய ப.ச. பகுதி, ஹிக்கடுவ ப.ச. பகுதி, தொடந்துவ ப.ச. பகுதி, அம்பன பினிகஹன கி.ச. பகுதி, கொலுவாமுல்ல ஓமத்த கி.ச. பகுதி, கோணபினுவல மிற்றியாகொட கி.ச. பகுதி, தொற்றகமுவ-திருனகம கி.ச. பகுதி, கறந்தெனியா கி.ச. பகுதி, பட்டபொய கி.ச. பகுதி, மாதம்பை கி.ச. பகுதி, வெறகொட கி.ச. பகுதி, றத்கம கி.ச. பகுதி, போப்பே கி.ச. பகுதி | 1 86 | 0 2 |
| கொத்தமல்லி, உழுந்து (தோலுடன்), பயறு, துவரம்பருப்பு, கடலைப்பருப்பு, புளி | டி | 2 86 | 0 3 |
| வெங்காயம் (ஈரவெங்காயமும் தவிர்த்து) ஈரவெங்காயமும், உருளைக்கிழங்கும் | அகங்கம ப.ச. பகுதி, அக்மீமன கி.ச. பகுதி, ஹபருதுவ கி.ச. பகுதி, கட்டுகொட கி.ச. பகுதி, கொட்டவ கி.ச. பகுதி, பொல்பகொட கி.ச. பகுதி, நாகொட கி.ச. பகுதி, போத்தல கி.ச. பகுதி, வந்துரம்ப கி.ச. பகுதி, தெலிகட மாயூவான கி.ச. பகுதி, வெலிவிற்றிய திலிதுற கி.ச. பகுதி, பிற்றிகலவெயிஹேன கி.ச. பகுதி, போத்திவெல நியாகம கி.ச. பகுதி, கத்தலுவ கி.ச. பகுதி | 2 5 | 0 2 |
| கொத்தமல்லி, உழுந்து (தோலுடன்), பயறு, துவரம்பருப்பு, கடலைப்பருப்பு, புளி | டி | 3 5 | 0 3 |
| வெங்காயம் (ஈரவெங்காயமும் தவிர்த்து) ஈரவெங்காயமும், உருளைக்கிழங்கும் | ஹினிதும கி.ச. பகுதி, ஓப்பாத்த கி.ச. பகுதி, நெலுவ கி.ச. பகுதி, தெல்லவ கி.ச. பகுதி | 2 11 | 0 2 |
| கொத்தமல்லி, உழுந்து (தோலுடன்), பயறு, துவரம்பருப்பு, கடலைப்பருப்பு, புளி | டி | 3 11 | 0 3 |

குறிப்பு.—மேற்குறிப்பிட்டுள்ள தொகைகள் உரிய விலையாகாவிட்டாலும், அவற்றிற்கு மேலதிகமாக பொருளை விற்பனை செய்யக்கூடாதென ஆஞ்ஞையிடுகிறேன்.

**12-1014.**

---

**உணவு விலைக்கட்டளை இலக்கம் : R/43/65.** **அரிசியும், கோதுமை மாவும்**

## 195? ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

கட்டளை

(173 ம் அத்தியாயமான) விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவை அச்சட்டத்தின் 3 (2) ம் பிரிவுடன் வாசிக்குமிடத்து எனக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு இரத்தினபுரி மாவட்டத்து உதவி விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி (உணவு) ஜோன் வின்சன்ற் ஞானப்பிரகாசம் ஆகிய நான் இக்கட்டளையால்—

(1) 1963 ம் ஆண்டு பங்குனி மாதம் 6 ந் திகதி வெளிவந்த 13,552 ம் இலக்க இலங்கை அரசாங்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 1963 ம் ஆண்டு பங்குனி மாதம் 1 ந் திகதி தொண்ட ஆர்/33/1963 ம் இலக்க அரிசி விலைக்கட்டளையையும் 1963 ம் ஆண்டு ஆவணி மாதம் 12 ந் திகதி வெளிவந்த 13,726 ம் இலக்க இலங்கை அரசாங்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 1963 ம் ஆண்டு ஆவணி மாதம் 6 ந் திகதி தொண்ட ஆர்/3?/10/63 ம் இலக்க கோதுமைமா விலைக்கட்டளையையும் இப்போதிருந்தே உடனடியாக நீக்கிவிடுகின்றேன்.

(2) இதனோடு இணைக்கப்பட்டிருக்கும் அட்டவணை 2 ம் பந்தியில் விபரிக்கப்பட்டிருக்கும் விலைகளை முறையே நிகர அந்தர் ஒன்றை மொத்த வியாபாரி ஒருவர் சில்லறை வியாபாரி ஒருவருக்கு விற்கும் ஆகக் கூடிய மொத்த விலைகளாக இப்போதிருந்தே உடனடியாக நடைமுறையில் வருமாறு விதிக்கின்றேன். இவ்விலைகளுக்குக் கூடுதலாக அட்டவணையின் 1 ம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள எல்லைகளுக்குள் அரிசி மொத்த விலைக்கு விற்றலாகாது.

(3) இதனோடு இணைக்கப்பட்டிருக்கும் அட்டவணையின் 3 ம் பந்தியில் விபரிக்கப்படும் விலைகளை முறையே நிகர் இருத்தல் ஒன்றை சில்லறை வியாபாரி ஒருவர் பாவிப்பாளர் ஒருவருக்கு விற்கும் ஆகக்கூடிய விலைகளாக இப்போதிருந்தே உடனடியாக நடைமுறையில் வருமாறு விதிக்கின்றேன். இவ்விலைகளுக்குக் கூடுதலாக அட்டவணையின் 1 ம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள எல்லைக்குள் அரிசி சில்லறைக்கு விற்றலாகாது.

(4) இக்கட்டளையின் நோக்கத்திற்காக—

(அ) ஒரு பொருளின் எத்தொகையையாவது திருப்பி விற்பதற்காக விற்றல் மொத்த விற்பனையாகும் ;

(ஆ) ஒரு பொருளின் எத்தொகையையாவது பாவிப்பதற்கு அல்லது உபயோகத்திற்காக விற்றல் சில்லறை விற்பனையாகும்.

(5) அரிசியைத் தவிர்ந்த வேறெவ்விதப் பொருள்களுடனோ அல்லது தரம் குறைந்த அரிசியுடனோ கலக்கப்பட்ட அரிசி விற்கலாகாதென்று ஆஞ்ஞையிடுகின்றேன்.

(6) இதனோடு இணைக்கப்பட்டிருக்கும் அட்டவணையின் 4 ம் பந்தியில் விபரிக்கப்பட்டிருக்கும் விலைகளை முறையே நிகர இருத்தல் 148 ஐ மொத்த வியாபாரி ஒருவர் சில்லறை வியாபாரி ஒருவருக்கு விற்கும் ஆகக்கூடிய மொத்த விலைகளாக இப்போதிருந்தே உடனடியாக நடைமுறையில் வருமாறு விதிக்கின்றேன். இவ்விலைகளுக்குக் கூடுதலான அட்டவணையின் 1 ம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள எல்லைக்குள் கோதுமைமா மொத்தவிலைக்கு விற்றல் ஆகாது.

(7) இதனோடு இணைக்கப்பட்டிருக்கும் அட்டவணையின் 5 ம் பந்தியில் விபரிக்கப்படும் விலைகளை முறையே நிகர இருத்தல் ஒன்றை சில்லறை வியாபாரி ஒருவர் பாவிப்பாளர் ஒருவருக்கு விற்கும் ஆகக்கூடிய விலைகளாக இப்போதிருந்தே உடனடியாக நடைமுறைக்கு வரும்படியாக விதிக்கின்றேன். இவ்விலைக்குக் கூடுதலாக அட்டவணையின் 1 ம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள எல்லைக்குள் கோதுமைமா சில்லறைக்கு விற்கலாகாது.

(8) இக்கட்டளையின் நோக்கத்திற்காக—

(அ) எத்தொகையான எவ்வித கோதுமைமாவையோ திருப்பி விற்பதற்காக விற்றல் அல்லது 148 நிகர இருத்தல் நிறையைக் கொண்ட அல்லது அதற்குக் கூடிய தொகையையோ ஒருமுறையில் விற்பது மொத்த விற்பனையாகவே கருதப்படுமென்றும்;

(ஆ) 148 இருத்தல் நிறைக்குக் குறைந்த கோதுமைமாவை உட்கொள்வதற்காகவோ பாவனைக்காகவோ விற்றல் சில்லறை விற்பனையாகவே கருதப்படுமென்றும்,

(இ) " கோதுமைமா " என்பது கோதுமைமாவுடன் கலந்த சோளம் மாவையும் குறிக்கும் என்று ஆஞ்ஞையிடுகின்றேன்.

(9) சோளம் மாவைத்தவிர்ந்த வேறு எப்பொருளுடனும் கலந்த கோதுமை மாவை விற்றல் ஆகாதென்று ஆஞ்ஞையிடுகின்றேன்.

(10) கோதுமைமாவையும் சோளம் மாவையும் கலந்து விற்குமிடத்து சோளம் மாவின் நிறை பத்து வீதத்திற்குக் கூடியதாக இருத்தலாகாதென ஆஞ்ஞையிடுகின்றேன்.

(11) இக்கட்டளையால் ஆகக் கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள இடத்தில் குறிப்பிட்ட விலைகளில் அவ்வாறு விற்கப்படும் அரிசி அல்லது கோதுமை மாவை சுற்றிக்கொடுக்கும் உறை அல்லது வைத்துக்கொடுக்கும் கொள்கலம் எதாவது உபயோகப்படின் அதன் விலையும் அடங்கவேண்டுமென ஆஞ்ஞையிடுகின்றேன்.

(12) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் அரிசி அல்லது கோதுமை மாவைத் தம்வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது வாகனத்திலாவது வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில் தகுந்த ஒரு கொள்கலத்தில் குறிப்பிட்ட அரிசி அல்லது கோதுமை மாவில் சிறு பகுதியையும் இக்கட்டளையால் அரிசி அல்லது கோதுமைமாவுக்கு விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலைகளையும் ஒரு அங்குல உயரத்திற்குக் குறையாத எண்களில், விலை அட்டைகளில் அல்லது பலகைகளில் எழுதி அரிசி அல்லது கோதுமைமாவும் ஆகக்கூடிய விலையும் வாங்குபவரால் நன்றாகப் பார்க்கக்கூடியவாறு அக்கொள்கலத்தில் இணைத்து வைத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகின்றேன்.

(13) இக்கட்டளையின் நோக்கத்திற்காக " இருத்தல் " அல்லது " இரு. " என்பது அவேர்டுபோஸ் எடுத்தலளவை முறையின் பிரமாண இருத்தல் நிறையாகக் கருதப்படுமென்று ஆஞ்ஞையிடுகின்றேன்.

(14) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் அரிசி அல்லது கோதுமைமாவை மொத்தமாகவோ சில்லறையாகவோ விற்கும் ஒவ்வொரு வியாபாரியும் அரிசி அல்லது கோதுமைமாவை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னாருக்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டு பற்றுச் சீட்டு ஒன்று கொடுக்கவேண்டுமென ஆஞ்ஞையிடுகின்றேன் :—

(அ) விற்பனை நடந்த திகதி ;

(ஆ) விற்ற அரிசி அல்லது கோதுமைமாவின் தொகை (நிறையில்) ;

(இ) விற்ற அரிசி அல்லது கோதுமைமாவிற்குக் கொடுக்கப்பட்ட விலை ;

(ஈ) எவ்விதமான விற்பனை, அதாவது மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா.

1965 ம் ஆண்டு மார்கழி மாதம் 10 ந் திகதி முற்பகல் 11.30 மணிக்கு இரத்தினபுரியில் கையொப்பமிடப்பட்டது.

யே. வி. ஞானப்பிரகாசம்,
பிரதி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு,)
இரத்தினபுரி மாவட்டம்.

அட்டவணை

| பத்தி 1 | பத்தி 2 | பத்தி 3 | பத்தி 4 | பத்தி 5 |
|---|---|---|---|---|
| | அரிசி | | கோதுமை மா | |
| | மொத்த வியாபாரியின் மொத்த அந்தர் ஒன்றின் மொத்த விலை | சில்லறை வியாபாரியின் ஆகக்கூடிய நிகர இரு. ஒன்றின் சில்லறை விலை | மொத்த வியாபாரியின் மொத்த அந்தர் ஒன்றின் மொத்த விலை | சில்லறை வியாபாரியின் ஆகக்கூடிய நிகர இரு. ஒன்றின் சில்லறை விலை |
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| (1) நவடும் கோறுலே | | | | |
| (அ) பட்டுகெதற, கலபொட, விலோபிற்றிய, எலபாத, மாறப்பொன கனகம, கறன்கொட, வெறகம், பலாவெல, கனகொமுவ, வெலிவனுவ, கொன்கும்புற, கக்கமுவ, எறபட, அமுனுபொன, பறண்டுவ, இம்புனுவ, உடகறவிற்ற, கறவிற்ற, டிமியாவ, பொலஸ்வல, கலலா, டம்புலுவான, பொபொத்த, உடவற்றுபிற்றியவும் நிறியெலவும் .. | 14 56 .. | 0 13¾ .. | 34 39 .. | 0 24½ |
| (ஆ) பெல்மதுலே, சனஸ்கம, மொறத்தோட்ட, ஹண்டுறுகண்ட, குற்றுப்பிட்டிய .. | 14 64 .. | 0 13¾ .. | 34 50 .. | 0 24½ |
| (இ) டெலா, வற்றப்பொத்த, நிவித்திகலே, கொழும்பகம, யக்கடெய்வத்தவும் பற்றகடவும் (நிவித்திகலே வாசமாவில்) .. | 14 60 .. | 0 13¾ .. | 34 45 .. | 0 24½ |
| (ஈ) வெவல்வத்த, கொககடியவல, அலுபொல, பெபொத்துவ, குறுபவிலகம, டெல்வலவும் ஹபபுகஸ்தலாவும் .. | — .. | 0 14 .. | — .. | 0 25 |

| பத்தி 1 | பத்தி 2 அரிசி — மொத்த வியாபாரியின் மொத்த அந்தர் ஒன்றின் மொத்த விலை ரூ. ச. | பத்தி 3 அரிசி — சில்லறை வியாபாரியின் ஆகக்கூடிய நிகர இரு. ஒன்றின் சில்லறை விலை ரூ. ச. | பத்தி 4 கோதுமை மா — மொத்த வியாபாரியின் மொத்த அந்தர் ஒன்றின் மொத்த விலை ரூ. ச. | பத்தி 5 கோதுமை மா — சில்லறை வியாபாரியின் ஆகக்கூடிய நிகர இரு. ஒன்றின் சில்லறை விலை ரூ. ச. |
|---|---|---|---|---|
| (2) குருவிற்ற கோறளே— | | | | |
| (அ) இரத்தினபுரி ந. ச. இடப்பரப்பு .. .. .. | 14 56 .. | 0 13¾ .. | 34 39 .. | 0 24½ |
| (ஆ) ஹிடிலன, கலுககம குருவிற்ற, மலன்கம, பறக்கடுவ, தெப்பனல; மில விற்றிய, டெஹிபகல, கடன்டன (மெத)வும் கரந்தன வடக்கும் .. | 14 46 .. | 0 13½ .. | 34 26 .. | 0 24½ |
| (இ) தேவாலகாவ, கொஸ்கல, மல்வல, கிளிமலே, இண்டுறுல, கறன்டான (பஹால) .. .. .. | — .. | 0 13¾ .. | — .. | 0 24½ |
| (ஈ) கெற்ற கெற்ற, எகலியகொடை, எல்லாவளே, இறப்பொல, மற்றுவகல, பொஹறபவ, பறனகம, மின்னன .. .. | 14 35 .. | 0 13½ .. | 34 11 .. | 0 24 |
| (உ) கிரியெல்ல .. .. .. .. | 14 70 .. | 0 13¾ .. | 34 58 .. | 0 24½ |
| (ஊ) வெவில்ல–கரந்தன, குறுலுவன, கரந்தன (தெற்கு), தொடம்பே, யற்றிபவ, எப்பிட்டிவல், கெற்றிபொல, மடல, எலகவ, குறுகமொடற | — .. | 0 13¾ .. | — .. | 0 24½ |
| (எ) லாசகண்ட .. ... .. .. | — .. | 0 14 .. | — .. | 0 24½ |
| (ஏ) சிறி பலபடலவும் .. .. .. | — .. | 0 14¼ .. | — .. | 0 25 |
| (ஐ) எரத்ன .. .. .. .. | — .. | 0 14½ .. | — .. | 0 25 |
| (3) குக்குல்கோறுலே— | | | | |
| (அ) சிங்களகொட, ஐயகம, கலருற இறப்பொறுவ, உடுகல, கலவானே, வெவல்கண்டுற, வெடக்கல, குக்குலேகம, பலிகண்ட, பொத்துப்பிட்டிய, றம்புக்கவும் டொலிக்கந்தவும் .. .. .. | 14 78 .. | 0 14 .. | 34 69 .. | 0 24½ |
| (ஆ) கொஸ்வத்தை .. .. .. .. | 14 86 .. | 0 14 .. | 34 80 .. | 0 24½ |
| (இ) பனுபொல கவறகிரிய .. .. .. | — .. | 0 14½ .. | — .. | 0 25 |
| (ஈ) பணஹெற்றகல .. .. .. | — .. | 0 15 .. | — .. | 0 25½ |
| (4) கடவெற்றவும் மெத கோறுலேயும்— | | | | |
| (அ) ஒப்பநாயக்கா, கிச்–பச் இடப்பரப்பு, உடவல, ஹெறகெற்றிய, ஹனுவலவும் அக்கறல்லவும் .. .. .. | 14 67 .. | 0 13¾ .. | 34 54 .. | 0 24½ |
| (ஆ) பலாங்கொடை, அம்புபிட்டிய, பெலிக்குலோயா, மாவுலத்ததென்ன, மொறகல, மாடோலா, வெலிகப்பொல, பல்லகண்ட, பின்னுவெல, இராசகல, பானுன, தமகஸ, இம்புல்பே, வெக்கிலிய, கோனகஸ்தென்னவும் போவத்தையும் ... .. .. | 14 75 .. | 0 14 .. | 34 65 .. | 0 24½ |
| (இ) முத்துவெகம, உடகம, இஹகலகம, பல்லிவெல, எப்பிற்ற பெற்ற, ஹற்றறபாகே .. .. .. .. | — .. | 0 14 .. | — .. | 0 24½ |
| (ஈ) கல்தோட்டை, கொலன்மட, ஹல்பேவும் பம்பகொலவும் .. | — .. | 0 14 .. | — .. | 0 25 |
| (உ) கேமாலியட .. .. .. .. | — .. | 0 14¼ .. | — .. | 0 25 |
| (ஊ) உருவல .. .. .. .. | — .. | 0 14½ .. | — .. | 0 25 |
| (5) அற்றகலன் கோறுலே— | | | | |
| (அ) றக்வானவும் பலங்கோற்றவும் .. .. .. | 14 78 .. | 0 14 .. | 34 69 .. | 0 24½ |
| (ஆ) கொடக்காவல, கொஸ்வெற்றிய, பம்பறகஸ்தன, வருயாய; வெறஹெற, கொறப்பொல, வெல்லாவ, அல்பிட்டிய, றிடிவித்த, அம்பவில்ல; பலிப்பெட, கொஸ்ன தோட்டை, மசிம் புல, கோலம்பகெதற .. | 14 72 .. | 0 14 .. | 34 61 .. | 0 24½ |
| (இ) மாகந்துற .. .. .. .. | — .. | 0 14 .. | — .. | 0 25 |
| (ஈ) பிற்றவெல .. .. .. .. | — .. | 0 15 .. | — .. | 0 25½ |
| (உ) கஹவத்தை, வெலந்துற, மாதம்பே அட்டகலன்பன்னே, பனுலென்ன, பன்னில–வெற்றுயாய, பனப்பிட்டிய, ஒப்பாத, கலலெலா, நிலந்தறே, மடலகம, என்டனவும் எந்தானவும் .. .. | 14 64 .. | 0 13¾ .. | 34 50 .. | 0 24½ |
| (6) கொலன்ன கோறுலே— | | | | |
| (அ) இற்றகண்ட, புளுத்தோட்டை, பொறலுவகென, வெயிறியவும் நெடொலவும் .. .. .. .. | 15 1 .. | 0 14 .. | 35 0 .. | 0 25 |
| (ஆ) இலின்டுவவ, கெல்ல, மிட்டெனிய, கொலன்ன .. .. | — .. | 0 14¼ .. | — .. | 0 25 |
| (இ) இலும்பேகண்ட .. .. .. .. | — .. | 0 15½ .. | — .. | 0 26 |
| (ஈ) எம்பிலிப்பிட்டிய, விசமுத்துற, பனுமுறவும் துன்கமவும் .. | 14 94 .. | 0 14 .. | 34 91 .. | 0 25 |
| (உ) ஹெனகொட .. .. .. | — .. | 0 15 .. | — .. | 0 25 |
| (ஊ) கும்புறுக்கமுவ .. .. .. .. | — .. | 0 15½ .. | — .. | 0 25 |
| (எ) டாப்பன .. .. .. .. | — .. | 0 15¼ .. | — .. | 0 25 |

குறிப்பு—(1) இவ்விலைகள், அரிசியும் மாவும் விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகளல்ல, இவை ஆகக் கூடிய விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக அரிசியை விற்கலாகாது.

(2) ஒரு அந்தர் நிறைக்கு கூடுதலான அல்லது குறைந்த அரிசியை மொத்த விற்பனைக்கு விற்கும் போது அத்தொகையின் ஆகக் கூடுதலான விலையை ஒரு அந்தர் விலைக்கு மேலே குறிப்பிட்ட ஆகக்கூடிய மொத்த விலையைக் கொண்டு கணக்கிடுதல் வேண்டும்.

(3) 148 இருத்தல் நிறைக்குக் கூடுதலான அல்லது குறைந்த கோதுமைமாவை மொத்த விற்பனைக்கு விற்கும் போது அத்தொகையின் ஆகக் கூடுதலான விலையை 148 இருத்தல் விலைக்கு மேலே குறிப்பிட்ட ஆகக் கூடிய மொத்த விலையைக் கொண்டு கணக்கிடுதல் வேண்டும்.

(4) மேலே குறிப்பிடப்படாத ஒரு இடம், குறிப்பிட்ட இரு இடங்களுக்கு இடையில் இருந்தால் மிக அண்மையில் உள்ள இடத்தின் கட்டுப்பாட்டு விலையையே உடையதாகும்.

12-745

இலங்கை வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.